தத்துவ ஆராய்ச்சி No. 2.

சிவமத விளக்கம்

ஆக்கியோன்

சித்தர். A. V. R. சரவணபவன்

பதிப்புரிமை] 1940 [விலை அணா 3.

உ

No. 2. தத்துவ ஆராய்ச்சி

சிவமத விளக்கம்

தத்துவ ஆராய்ச்சி நிபுணர் என்று
மதுரை சித்தவைத்திய ஆராய்ச்சி சங்கத்திலும்
சென்னை மாகாண சித்தவைத்திய மகாநாட்டிலும்
தங்கமெடல்களும் கவர்ன்மெண்டு B. கிளாஸ்
சர்டிபிகேட்டும் பெற்ற

சித்தர் A. V. R. சரவணபவன்

பலர் வேண்டுகோட்கிணங்கி
தொகுக்கப்பெற்றது.

இதன் விலை] 1940 [அணா 4

முகவுரை.

உலகில் தற்சமயம் எங்குபார்த்தாலும் மதப்பிரசாரங்கள் நடைபெற்று வருகின்றன. அவரவர்கள் தத்தம் மதங்கள் நிலைபெற்று விர்த்தியடைவதற்கு வேண்டிய முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள். இதற்கிடையே இந்நூலாகிய “ சிவமத் விளக்கம் ” என்னும் ,தத்துவ ஆராய்ச்சி உதயமாகின்றது.

ஷை நூலின் கருத்து எம்மதத்தைப் பற்றியும் தாழ்த்தியோ, மிகைபடக் கூறியோ, தூஷணை செய்தோ கூறப்படுவனவல்ல. ஸ்மிருதிகளிலும் புராண இதிகாசங்களிலும் விளக்கப்பட்டுள்ளனவற்றை சகல மதத்தினரும் தெரிந்து கொள்வதன்பொருட்டே இதனை எளிய செந்தமிழ் நடையில் எழுதப்பெற்றது.

ஆகையால் மதப்பற்றுதலுடையாரும் மற்றவர்களும் இச்சிறு நூலை யேற்று ஆதரிப்பதுடன் இதிற்காணும் குற்றங்களைந்து குணத்தைக் கைக்கொள்ளுவார்களென்பதும் எமது துணிபு.

தவிர இந்நூலில் இன்னும் விசேஷமாக ஏதேனும் சொல்லப்படுவனவும் சீர்திருத்தங்களு மிருப்பின் தெரிவித்தால், அங்ஙனம் ஏற்று அடுத்த பதிப்பில் சேர்ப்பதுடன், அன்னார்கட்கு மிகுந்த நன்றியறித லுடையவனாகவு மிருக்கின்ற

ஆக்கியோன்.

சித்தர் A. V. R. சரவணபவன்.

தத்துவ ஆராய்ச்சி நிபுணர்,

10-கீழவடம்போக்கித்தெரு, **மதுரை.**

கருத்துரை.

தமிழ்மக்கள், பிரமதவாதிகள், கையாளும் சமய நூல்களில் கூறும் உண்மைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படி தெரிந்துகொண்டால் தான் அவற்றோடு பழந்தமிழ் நூல்கள் கூறும் உண்மைகளும், ஒழுக்கமுறையும் ஒத்து நோக்கி நல்லன மேற்கொண்டு முன்னேற முடியும். இந்த எண்ணம் கொண்டே இதையும், இதுபோன்ற பிரமத நூற் கொள்கைகளையும் வெளியிடத் துணிந்தேன். மற்றப்படி இது வெளியீடுகளிலுள்ள கொள்கைகளும் விதிகளும் தமிழருக்கு எவ்வித சம்பந்தமும் இருப்பதாக எண்ணலாகாது.

A. V. R. சரவணபவன்,
ஆக்கியோன்.

இந்நூல் அச்சிடவேண்டியது
அவசியமென்று கேட்டுக்கொண்ட

பிரமுகர்கள்.

டாக்டர். R. M. P. ராமசாமி நாயுடு,
ஞானகுருபரன் சித்தர் தர்ம்ம வைத்தியசாலை,
யானைக்கல்தெரு, மதுரை.

டாக்டர். R. S. ராமசாமி ஆசாரி,
சக்திகுருபரன், சித்த தர்ம்ம வைத்தியசாலை,
யானைக்கல்தெரு, மதுரை.

டாக்டர். எஸ். எஸ். சந்திரன், செக்ரட்டேரி
சித்தவைத்திய (சங்கம்-ரிஜிஸ்டர்டு) 1929.
ஆபீஸ், ஞானகுருபரன் சித்தர் தர்ம்ம வைத்தியசாலை,
மதுரை.

பொருள் அட்டவணை.

பசுமலை

உயர்தர வழக்கறிஞரும், தமிழ்ப் பேராசிரியருமாகிய

திருவாளர் S. S. பாரதியாரவர்கள்

அபிப்பிராயம்.

சித்தர் திரு. சரவணபவன் அவர்கள் வெளியிடும் ஸ்மிருதி விளக்கம் முதலியவைகளைப் படித்துப் பார்த்தேன். அவர்கள் நோக்கம் எனக்கு முழுதும் உடன்பாடே. தமிழர் தங்கள் பழநான்மரபுகளையும் உண்மைகளையும் ஆராய்வதோடு, பிறமதவாதிகளின் மரபுகளையும் கொள்கைகளையும் உள்ளவாறுணர்ந்து ஒத்துநோக்குதல் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பதென் கருத்து. அதனால் இவர்கள் நன்முயற்சி பாராட்டத்தக்கது.

பசுமலை,
9—11—40. }

S. S. Bharathi.

சித்த வைத்திய ஆராய்ச்சி சங்கம்

முனிச்சாலைரோட், மதுரை.

சகல மனித ஜென்மத்தைச் சகோதரமாக நினைத்து சகல மதங்களுடைய ஆராய்ச்சியும் எல்லோரும் தெரிய வேண்டியதை முன்னிட்டு சிறியநடையில் திரு. சித்தர் A. V. R. சரவணபவன் (தத்துவ ஆராய்ச்சி நிபுணர்) அதிக பிரயாசையுடனும் அருமையாகவும் எழுதியதைப் பார்வையிடப்பட்டது. எந்த மதத்தையும் இந்துமதம் குற்றமன்னியில் ஒப்புக்கொள்ளக்கூடியதே. நல்லெண்ணத்துடன் வெளியேறிய இந்நூல்கள் மென்மேலும் விருத்தியடைய இச் சங்கம் கடவுளை தோத்திரஞ்செய்கிறது.

காரியதரிசி

9—11—40
மதுரை. }

ச. சுப்பையா முதலியார்,
சித்தவைத்திய ஆராய்ச்சி சங்கம்,
முனிச்சாலை ரோடு, மதுரை.



ஆசிரியர்: **A. V. R.** சரவணபவன்.

சிவமத விளக்கம்

1. அறிவின் விபரம்

கல்வியினூங் கில்லை சிற்றுயிர்க் குற்றதுணை

எண்ணென்ப வேனை எழுத்தென்பவிவ் விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு ஜீ—கோ—11.

வித்துவிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின்மிசைவான் புலம். ஜீ—கோ—12.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்துக்கெல்லாம் தலை. ஜீ—கோ—11.

எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு.

எப்பொருள் எத்தன்மைத்தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு. ஜீ—கோ—53.

ஆண்டு தருமத்தை யறியாதான் செய்கருமம்
மாண்டமாத்திற் கனைத்தமண். ஜீ—கோ—11.

2. ஆகாயத்திலிருக்கிற கிரகங்கள் நக்ஷத்திரங்கள்

நவக்கிரகங்கள் 9 பேர்–9 பேற்றுக்கு–9 பிள்ளைகளும் யூரேன்ஸ், நெப்சூன் என்ற கிரகங்களும், 27-நக்ஷத்திரங் களும் ஆகாயத்திலிருக்கிறது, நக்ஷத்திரங்கள்பிரமாண்டமான சூரியர்கள் என்றும், சந்திரனுக்கு விஸ்வாமித்திரர் சம்சாரம் சேர்க்கையால் களகாந்தன் என்ற பேர். பு—ஆ—40.

செவ்வாய்க்கு 4. வியாழனுக்கு 7. சனிக்கு 10. யுரேனஸ்கு 4. சந்திரர்களும், சனியைச்சுற்றி (நுபுலாப் போன்ற) அனேககோடி உபக்கிரகங்கள் கூடிய ஒரு வளைய மிருப்பதாயும், ஜீ—கோ—17.

(தருமம் 32) இதில் இட்டாரையும் ஏற்ருரையும் கூடுத லுண்டாக்கும் தருமம் வித்தியாதானம். கொடுத்தால் குறை யாததும் பெற்றோர்களுக்கு திருப்தியுமுள்ளது.

3. கடவுள் எத்தன்மை யுடையது?

கடவுள்—தெய்வம்.(இந்துமதம்)மகம்மதியர்மதம்-அல்லா கிறிஸ்துவர்-கர்த்தர், எல்லாம்-கடவுள் என்ற அர்த்தம். கட வுள் ஆதியந்தம் இல்லாமலும், எங்கும் நிறைந்தும் எல்லா ஜீவகோடி வஸ்துகளிடத்திலும் உள்ளும் புறமும் நிறைந்தும் எல்லாத்துக்கும் காரணமாயும் உண்டாக்கவும் அழிக்கவும் சக்தியுடையதாயும் இருக்கப்பட்ட வஸ்து கடவுளாகும்.

கடவுள் வேறுபடாதது. எவ்வுருவுமவ்வுருவாய் எங்கும் நிறைந்து, எல்லாம் தாஞகி, எச்செயலும் அச்செயலாய் அறி வாய் விளங்குவதும் நினைப்பதும் நிகழ்வதும், நினையாமல் நேர்வதும், விருப்பும் வெறுப்புமற்று சாட்சி மாத்திரமாய் நிற்கிறது. காலம் முந்தியது. கடவுள் என்பது நாம் பிந்தி யேற்படுத்திக்கொண்டது. ஜீ—கோ—131.

பஞ்சபூதியங்களாகிய ஆதாரமாய் அதற்குள் அதுவாய் அக்கினிமயமாய் கற்றன்ட்ஸா யிருக்கப்பட்ட அறிவே தெய் வம் என்று அனுமானிப்பதே சுருதி யுத்தி அனுபவமென்று ஜீ—கோ—132.

முன் யூரோப்பியர் (ஒக்ஸ்) என்ற பெரியமரமும், மதுரையில் கடம்பமரமும், திருவானைக்காவலில் வெண்ணு வல் மரமும், திருவாலங்காட்டில் ஆத்திமரமும் தெய்வ மென்று வணங்கி வந்தார்கள். ஜீ—கோ—30.

இப்போதும் இந்தியாவில், அரசமரத்தையும் வேப்ப மரத்தையும் வணங்கி வருகிருர்கள். ஜீ—கோ—48.

கல்லில் கடவுள் இருப்பாரா என்று ஜீ—கோ—49.

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுஷ்பஞ் சாத்தியே
சுற்றிநின்று முணுமுணென்று சொல்லு மந்திரமேதடா
நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ.

ஜீ—கோ—134-சி-வா-101.

கடவுளைப்பற்றி விசாரிப்பது அனுவசியமென்றும், உலகில் நன்மையைக் கடைப்பிடித்து நடப்பதேமுறை. (அது புத்தர் மதக் கொள்கை.) ஜீ—கோ—132.

திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் சிவமதஸ்தர் உண்டாக்கினர்கள். ஷை புராணத்தில் சமணர்களென்றும் புத்தர்கள். மதுரையை அழிக்க யானைமலை, நாகமலை, பசுமலை, இவைகளை யாகத்தில் செய்து அனுப்ப சிவன் கல்லாய் சபித்ததாய், ஜீ—கோ—35.

4. சிவபூசை விபரம்

சரிதை = திரேக சுத்தி, அலங்காரம், நமஸ்காரம் மற்றவர்களைக்கொண்டு, தெய்வத்துக்கு தூப, தீப, நிவேத்தியம், முதலியது செய்து சர்வசித்தி முத்திகளைப் பெறுதல்.

கிரியை = தானே ஷை விஷயங்களைச் செய்து சோடச உபசாரங்களும் பூசைசெய்து சர்வசித்தி முத்திகளைப் பெறுதல், ஏகாக்கிரக சித்தனாய் எந்த லட்சியத்தை வைத்து சிந்திக்கிறானோ, அவ்வறிவே தெய்வமாக.

ஜீ—கோ—113.

யோகம் = (பிராணாயாமம்) கடவுள் தன்னிடத்தில், மூலாதார முதல் குண்டலி சத்திவரை, பிராணவாயுவை எழுப்பி நிஷ்டையிலிருப்பது பிராணாயாமம். சித்தசுத்தி (ஆயுசு விர்த்தி) ஜீ—கோ—111 & 127.

ஞானம் = (ஞானி) அறிவு-தெரிந்தவன், தன்னிடத்திலேயே கடவுளிருப்பதை அறிந்தவன்.

அத்துவிதம்=சிவன், ஜீவன் இரண்டையும் ஒன்ருகப்பாவிப்பது.

துவிதம்=மேற்படி இரண்டையும் தனித்தனி பிரித்துப் பார்ப்பது. ஜீ-கோ-49.

கோ+இல்=கோவில்-அரசன் இல்லம்-ஜீ-கோ-107.

ஞானபூமி=(7) 1-வது பூமி இச்சுபேச்சை. 2-வது பூமி ஆத்ம விசாரணை. 3-வது அசங்கபாவனை. 4-வது விலாபிணி. 5-வது மயக்கமில்லாத பரிசுத்தமாகிய நல்லஞானமய ஆனந்த ஸ்ரூபம். 6-வது ஜீவன் முத்தி. நித்திரையும் விழிப்பும் பாதி (சுழுத்திய வத்தையைப் போல்) பூர்ணமான வோர் ஆனந்தத்தி விருத்தல். 7-வது (துரியாதீதம்) பிரிவற்ற சமமாகியும், சொச்சமாகியும் நல்லதாகியும், உபசாந்தமாகியும்,சுத்ததுரியமாகியும். கைவல்யமாகிய மோக்ஷமே, (ஞானவாசிட்டம் 386-வது பக்கம்.)

பரிசித்து=சுகரால் பிர்ம்மஞானம் அடைந்தார்.

பிர்ம்மக்கியானம்=என்பது வாசித்து தெரியவேணுமே யொழிய கருமத்தால் வருவதல்ல.

பிர்ம்மவித்தையை= அத்தியாமம் வித்தை என்று சொல்லலாம்.

சங்க்ஷேபமாக=வேதாந்த வித்தை யிருக்குமா? சங்க்ஷேப கிரந்தத்தினுல் மோக்ஷம் கிடைக்குமா என்ற சந்தேகம்.

கட்வாங்க மகாராஜன், 2 நாழிகையில் ஞான உபதேசம் செய்து மோக்ஷத்தை அடைந்ததாக பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறதாம். கட்வாங்கன் பார்த்த கோபஸ்திரீகள் 2 நாழிகையில் மோக்ஷத்தை யடைந்தார்களாம்.

ஞானம்மேவ-மோக்ஷஹா அறிகிறதுதான் மோக்ஷம்.
சுரக்கியானி-ஸ்வரத்தை யறிந்தவன்.
தாளக்கியானி-தாளத்தை யறிந்தவன்.
பிர்ம்மக்கியானி-பிர்ம்மத்தை யறிந்தவன்.

ஸர்வம், கல்விதம், பிர்ம்மா=என்று வேதம் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்ம்மம்=எல்லா வஸ்துவினுடனும் கூடயிருக்கிறது.

அகம் பிரமகஸ்மி=நான் பிர்ம்மமாகிறேன்.

அயிம்மாத்மா=பிர்மம் = ஆத்மா பிர்மம் (அஸ்வத்த விருக்ஷம்)

ஆத்மாவை பத்திரணும்ர்கி = என்று சுருதி வாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறது.

பிர்ம்மக்கியானி=திரிகால வேதியா யிருக்கவேணுமென்கிறார்கள்.

சோதிடம், கர்ண எக்ஷணி முதலிய பிசாசுகள் பிர்ம்மக்கியானியா?

வேதம்—தத்தியாம்ஸி, என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ததேக தியானம்=பிர்ம்மநிஷ்டை.

சிரத்தாவான லபதே=ஞானமென்று கிருஷ்ணபகவான் சொல்லியிருக்கிறார்.

பிரஞ்ஞானம், பரமா, தத்துவமசீ, தத்துவம்சி என்று வேதம் சொல்லியிருக்கிறது.

பசுவுக்கு=கர்மேந்திரியங்கள் இல்லை.
வண்டுக்கு=சுரோத்திரேந்திரிய மில்லை.
விருக்ஷங்களுக்கு=24 தத்துவங்களில்லை.

கர்மேந்திரியங்கள் = ஞானேந்திரியங்கள் அந்தக்கரணங்கள் = ஆத்மா. இந்திரியாண்ணிரயாண்ணியா ஹரூ ஹரூ=பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கிறது.

5. வர்ணாஸ்ர மாசார தருமங்கள்

நித்திய நைமித்தியாதி கருமங்கள், தீர்த்த யாத்திரைகள், பக்திவைராக்கியங்கள் நித்திய நைமித்திய பிராயசித்தமான, புண்யகன்மங்கள் செய்யவேண்டும்.

தேகம்அகங்காரம் இந்திரியங்கள்-10-ம் பஞ்சபிராணன் 5-ம் அதிட்டான தேவதைகள் (இந்த 5-ம் சேர்த்து) கன்மங்கள் செய்ய வேண்டும்.

ஆத்மா = அசங்கர் = அவரால் ஒன்றும் செய்ய முடியாது. சரீரம், வாக்கு, மனதினால்தான், தருமா தருமம் செய்யப்படவேண்டும்.

மோக்ஷார்த்தியானவன் = பக்தி ஸத்கர்ம்மம். சாதன சந்துஷ்டி மகா வாக்கியார்த்தங்களையும், யோகாப்பியாசம், இவைகளைச் செய்யவேண்டு மென்றும் சிலர் சொல்லி சந்தேகம் உண்டு செய்கிறார்கள்.

மாயா தத்துவம், மகதத்துவம், அகங்காரம், 3ம் கூடப் பிறந்ததுகள்.

தமோத குணமாகிய—நிடேதனங்கள் - நரகம் என்றும்,

சத்துவகுணமாகிய = வேதங்களில், சொல்லப்பட்ட எக்கிய காமிய கன்மங்கள், சுவர்க்கம் என்றும்,

இரசோகுணம்=மிசிர கன்மங்கள் மனிதலோகம் என்றும் சொல்லுகிறார்கள்.

மோக்ஷம்=விடுதலை, பந்தம்=பிடிப்பு சரீரி.

பிரத்தியக்ஷம்=நேராய்ப் பார்த்தல்.

அனுமானம்=புகையினால், நெருப்பை அனுமானித்தல் போல்.

ஆகமம்=பெரிவர்களால் சொல்லக் கேட்பது.

அருத்தாபத்தி= அருத்தம் + ஆபத்தி=உபபாதக வஸ்து (கற்பனை)

உபமானம்=மரை, பசுப்போல்-திருஷ்டாந்தம்.

ஐதீகம்=கர்ண மூலமாய் வழங்கி வருகிறது (பேயுண் டென்று)

சம்பவம்=ஒன்று உண்டானல் - ஆயிரமுண்டென்று காட்டுவது.

பிரமாணங்கள்=இந்திரியம் (பிரம பிரமா லெக்ஷணத் திற்கு யெது காரணமோ அது.)

6. லக்ஷண தோஷம் (3)

அதிவியாபதி 1. அவ்வியாபதி 2. அசம்பவம் 3.

(1) அதிவியாபதி = இலக்கியத்தினும் வியாபித்து இலக்கியமல்லாது கண்ணும் இருப்பது.

திருஷ்டாந்தம்=பசு, கொம்புடையது. இலக்கியமாகிய பசுவிலும் வியாபித்து, இலக்கியமல்லாததான மான் முதலிய வற்றிலும் வியாபிக்கிறது.

(2) அவ்வியாபதி = இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்ஷண மிருத்தல்.

திருஷ்டாந்தம்=கபில நிறமுடையது பசு, இது பசுவி னங்கள் முழுவதினு மில்லாமல் ஏகதேசமாயிருக்கிறது.

(3) அசம்பவம்=இலக்கிய முழுவதினுமின்மை.

திருஷ்டாந்தம்=முயல் கொம்புடையது. இலக்கியமா கிய முயலினத்தில் முற்றுமில்லாதிருத்தல்.

சர்வதிரவியம் 9. பஞ்சபூதம்-5, காலம் 1, ஆன்மா 1, திக்கு 1, மனஸு 1 ஆக-9.

7. அபாவம் (5)

I பிரகப்பாவம் = முன்னின்மை = கடத்தினுற்பத்திக்கு முன் கடமில்லாததே = அனுதியாயும், அந்த முடையதாயுமிருக்கிறது. கடவுற்பத்திக்கு முன் அனுதியாயும், கடவுற்பத்திக்கு பின் அந்த முடையதாயு மிருக்கிறது.

II. பிரதொம்சபாவம் = பின்னின்மை கடம் உடைந்ததின் பின் மண்ணில் கடமின்மை. இது ஆதியை உடையதாயும் அந்தமில்லாததாயுமிருக்கிறது. அழிவு பாட்டின்மை மூன்று காலத்திலுமுள்ள அபாவம்.

III. அன்னியோன்னியபாவம் = ஒன்றிலொன்றின்மை இதுகளிடத்தில் படத்தினின்மையும் படத்தில் கடத்தினின்மையாம், இது அனுதியாயும் அந்தமில்லாததாகவு மிருக்கிறது.

IV. அத்தியந்தபாவம் = முழுதுமின்மை, இது வாயுவில் ரூபத்தின்மை, அனுதியாயும் அந்தமில்லாததாயு மிருக்கிறது. ஒருவஸ்துவினின்றும் மற்றொரு வஸ்துக்குள்ள பேதம்.

V. சாமியிகாபாவம் = தற்காலத்தின்மை, இது கடமிருந்த ஓரிடத்தில் கடத்தை எடுத்துவிட்டால் எடுத்த பிற்பாடுள்ள கடத்தின்மை = இது ஆதியாயும் அந்தமுடையதாயு மிருக்கிறது.

தேக நிஷ்டை = தேகத்தையே ஆத்மா என்று நிச்சயத்திருத்தல்.

புரியப்கம் = கமனு கமனுதிகளை, செய்கிற சூக்ஷம சரீரம்.

தம்தாயபிண்டம் = இரும்பும் அக்கினியும் சேர்ந்து, யேகரூபமாய் நெருப்பாயிருப்பது.

நிர்லோபன கட்டளையில் லோகாந்தகுந்தம் = இரும்பாகிய லோகத்தை ஓர் முனையிலுடைய உலக்கை, இதுபோலாக அபிமான ரூபத்தை முதலிலுடைய விருத்திரூபமானகுந்தம்.

தம் உரிமைச்சொல் தம் அக்கை = தமக்கை
,, ஆய் = தாய்-மா-மாதா-மம்மா-மதர்
,, அப்பன் = தகப்பன்
,, இழ் = தமிழ்
தமிழ் உலவு அகம் = தமிழ் உலகம்

ஜீ—கோ—119.

8. த்ரிகால ஸந்தியாவந்தனம்

ஆசமனம்-ஓம் அச்யுதாய நம: ,, அநந்தாய நம: ,, கோவிந்தாயநம:	என்று மூன்றுதரம் ஆசமனம்செய்து(ஷேடிமூலம்சுத்த ஜலம் உட்கொண்டால் கண்டத்தைப் பற்றிய வியாதி நீங்கும்.) ஜீ—கோ—111.

கேஸவ	பெருவிரலால்	வலது கன்னம்	இடங்களைத் தொட வேண்டியது.
நாராயண	,,	இடது கன்னம்	
மாதவ	பவுந்திர விரல்	வலது கண்	
கோவிந்த	,,	இடது கண்	
விஷ்ணோ	ஆள்காட்டிவிரல்	வலது மூக்கு	
மதுசூதன	,,	இடது மூக்கு	
த்ரிவிக்ரம	சிறுவிரலால்	வலது செவி	
வாமன	,,	இடது செவி	
ஸ்ரீதர	மத்தியவிரல்	வலது புஜம்	
ஹ்ருஷீகேஸ	,,	இடது புஜம்	
பத்மனாப	கையைகுவித்து	இருதயம்	
தாமோதர	கையைவிரித்து	சிரசு	

2. ஸங்கல்பம்- சுக்லாம் ப்ரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம். சதுர்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப ஸாந்தயே என்று சிறுவிரலால் குட்டிக்கொண்டு

3. ப்ராணாயாமம் ஓம் பூ:
,, புவ:
,, ஸுவ:
,, மஹ:
,, ஜன:
,, ஸத்யம்

ஓம் தத்ஸ விதுர்வரேண்யம் பர்கோ, தேவஸ்ய, தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத் ஓமாபோ ஸ்யோதிரஸ:- அம்ருதம்-ப்ருஹம்- பூர்புவஸ்ஸுவரோம் என்று வலதுகை நடுவிரலை மடக்கி பெருவிரல் பவுந்திரவிரல் மூன்றிலும் நாசியைப்பிடித்து விட்டுவிடவும்.

காலையில்-வலது தொடைமேல் இடது கையை வைத்துக் கொண்டு வலக்கை பெருவிரலில் பூணூலைவிட்டுக்கொண்டு சொல்லவேண்டியது.

மமோபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா, பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ப்ராத: ஸந்த்யா., உபாஸிஷ்யே என்று கையை எடுத்துவிடவும்.

மத்தியானம்-மாத்யாஹ்நி கம்கஸிஷ்யே.

சாயந்திரம்— ஸாயம் ஸந்த்யாம் உபாஸிஸ்யே.

4. ப்ரோக்ஷண மந்திரம்-வலக்கை பவுந்திரவிரலால் ஜலத்தை சிரசில் புரோச்சிக்க வேண்டியது.

ஓம் ஸ்ரீகேஸவாயநம: ஆபோஹிஷ்டா மயோபுவ:
தான ஊர்ஜே ததாதன மஹேரணுய சக்ஷஸே யோவ:
ஸிவதமோரஸ: தஸ்ய பாஜய தெஹந: உஸதீரிவ மாதர:
தஸ்மா அரங்கமா மவோ: யஸ்யக்ஷயாய ஜீன்வ ஆபோ ஜனதாசன
ஓம்-பூர்புவஸ்ஸுவ: என்று ஜலத்தை எடுத்து சிரசைச் சுற்ற வேண்டியது.

5. காலையில்-வலதுள்ளங்கையில் கொஞ்சம் ஜலத்தை எடுத்துக்கொண்டு

சூர்யச்ச மாமன்யுச்ச மன்யுபதயச்ச மன்யுக்ருதேப்ய:
பாபேயோரக்ஷந்தரம் யத்ராத்ரியா பாபமகார் ஷ.
மனஸா வாசா ஹஸ்தாப்யாം பத்ப்யாமுதரேன, சிஷ்ஞ
ராத்ரிஸ் ததவலும்பது யத்கிஞ்சதுரிதம்மயி இதமஹம
மாமம் ருதயோனௌ சூர்யே ஜோதிஷி ஜுஹோமி
ஸ்வாகா என்று ஷெ ஜலத்தைச் சாப்பிடவும்.

6. மாத்யாஹ்நிகத்தில்:-

ஆப: புனந்து ப்ருதிவீம் ப்ருதிவிபூதா புனதுமாம்
புனந்து ப்ரம்ஹணஸ்பதி ப்ரஹ்மபூதா, புனதுமாம்
யதுச்சிஷ்ட போஜ்யம் யத்வாதுஸ் சரிதம்மம்,
ஸர்வம் புனந்து மாமாப: அஸதாம்ச ப்ரதிக்ரஹம
ஸ்வாகா என்றும்

7. சாயங்காலத்தில்:-

அக்னிஸ்ச மாமன்யுச்ச மன்யுபதயச்ச மன்யுக்ருதேப்ய:
பாபேய்யோ ரக்ஷாந்தாம் யதஹ்நா பாபமகார்ஷம்.
மனஸா வாசா ஹஸ்தாப்யாம பத்ப்யா முதரேண சிஷ்ஞ
அகஸ்த்த தவலும்பது யத்திஞ்ச துரிதம்மயி இதமஹம
மாமம் ருதயோநௌ ஸத்யே ஜ்யோதிஷி ஜுஹோ
மிஸ்வா: என்று ஜலத்தைச் சாப்பிடவும்.

8. அர்க்யாப்ரதானம்-காலை, மாலை 3 தடவை, மத்தியானம் 2 தடவை ஜலத்தை 2 கையினாலும் எடுத்து மார்புக்கு நேர்வைத்துக்கொண்டு அடியில்கண்ட மந்திரத்தைச்சொல்லி அர்க்கியம் கொடுக்கவும்.

:ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்வ விதுர்வரேண்ய பர்ஹோ தேவஸ்ய தீமஹி தீயோ யோந: ப்ரஸோத்யாத் காலதீதப் ராய்ஸ் சித்தார்க்ய,தானம்க,ரிஷ்யே ,,
(பிராணயாமம்செய்ய.)

9. பிறகு கொஞ்சம் ஜலத்தை எடுத்துக்கொண்டு தன்னைத் தானே பிரதக்ஷணமாக வந்து

அஸா வாதித்யோ ப்ரஹ்ம ப்ரஹ்மைவ அஹமஸ்மி
என்று சொல்லி
சூர்யனே ப்ரஹ்மஸ்ரூபனென்றும் அந்த பிரஹ்மஸ்ரூப மாகவே, தான் இருப்பதாகவும் தியானிக்கவேண்டியது. பிறகு ஆசமனம் செய்யவும்.

10. நவக்கிரஹ கேசவாதி தர்ப்பணம்.

ஆதித்யம்	தர்ப்யாமி	மாதவம்	தர்ப்யாமி	என்று ஜலத்தில் 2 கைகளினால், தர்ப்பித்துக் கொள்ளவும்.
ஸோமம்	,,	கோவிந்தம்	,,	
அங்காரகம்	,,	விஷ்ணு	,,	
புதம்	,,	மதுஸூதனம்	,,	
ப்ருஹஸ்பதிம்	,,	திரிவிக்ரமம்	,,	
சுக்கிரம்	,,	வாமனம்	,,	
சனேஸ்சரம்	,,	ஸ்ரீதரம்	,,	
ராகும்	,,	ஹ்ருஷிகேஸம்	,,	
கேது	,,	பத்மனபம்	,,	
கேஸம்	,,			
நாராயணம்	,,	தாமோதரம்	,,	

11. திரிகாலஜபவிதி:-ஸங்கல்பமும் ப்ராணயாமமும் செய்து

காலே-மமோபாத் முதல் பரமேஸ்வர, ப்ரீத்யார்த்தம்வரை செய்து பிராதஸ், ஸந்தியா காயத்ரீ மஹாமந்திர ஜபம் கரிஷியே

மத்தியானம்-மாத்யாக்நிக ஸந்தியாகாயத்ரீ மஹாமந்திரஜபம் கரிஷியே

சாயங்காலம் - ஜாயம் ஸந்திகா காயத்ரீமஹா மந்திரஜபம்கரிஷியே

மந்திரம்-ப்ரணவஸ்ய ப்ரஹ்மா ரிஷி: என்று சிரஸிலும்
தேவிகாயத்ரீச்சந்தகா என்று நாசிநுனியிலும்
ப்ரமாத்மா தேவதா என்று மார்பிலும்
கைவிரல்களால்தொடவும்.

பூராதி ஸப்தவ் யாஹ்ருதீனும் அத்ரி ப்ருகு குத்ஸ வஷிஷ்ட கௌதம காஸ்யப ஆங்கிரஸங்கரிஷயகா என்று சிரஸிலும்

காயத்ரி உஷ்ணிக் அனுஸ்குப்ருஹதி, பங்தித்ரிஷ்குப் ஜகத்யகாச்சந்தாஸி என்று நாஸியிலும்

அக்னி, வாய்வு அர்க்கவாகீஸ வருண இந்திரவிஸ்வே தேவாகா தேவதா என்று மார்பிலும் கையை வைத்துக் கொள்ளவும்.

பிராணயாமம் 10 தடவை, ஜபிக்கவும்.

ஆயாத்விதி அனுவாகஸ்ய வாமதேவரிஷிகா
அனுஷ்குப் சந்தகா காயத்ரீ தேவதா ஆயாதுவரதாதேவி
அக்ஷரம் ப்ரஹ்ம ஸம்மிதம் ।
காயத்ரீம்ச் சந்தஸாம் மாதாஇதம் ப்ரஹ்ம ஜுஷஸ்வநகா॥
ஓஜோஸி ஸஹோஸி பலமயிப்ராஜோஸி தேவனும்
தாமநாமாஸி விஸ்மமயி விஸ்வாயுகா ஸர்வமஹி
ஸர்வாயுநா அபிபூரோம் காயத்ரீம் ஆவாஹ யாமி
ஸாவிதிரிம் ஆவாஹயாமி, ஸரஸ்வதி ஆவாஹ யாமி
ஸாவித்ரியா விஸ்வாமித்ர ரிஷிகா
நிச்ருத்காயுச் ரீச்சந்தகா ஸவிதா தேவதா

12. காயத்ரிஜபம் ஓம் பூர்புவஸ்ஸுவ: தத்ஸ்விதுர்வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோந: ப்ரசோதயாத்

இந்த மந்திரத்தை காலை 108, மத்யானம் 32, மாலை 64 } பிராணயாமம் 3-தடவை செய்யவும்.

13. காயத்திரி உபஸ்த்தான மந்திரமும் 3-காலமும் செய்யலாம். ருக், யசுர், வேதங்களுக்கு மத்தியானத்துக்கும் சாயங்காலத்துக்கும் வித்தியாசமாகயிருக்கிறது.

9. யஜ்ஞோபவீத தாரணம்

14. கால்களை சுத்திசெய்து அல்லது ஸ்நானம் செய்து 2 வஸ்திரம்தரித்து கிழக்குமுகமாக *ஸ்வஸ்திகாசனம் அமர்ந்து விபூதி தரித்துக்கொண்டு, ஆசமனம்செய்து, சுக்லாம்பரதரம் + சாந்தயே ஓம் பூ: + ஓம் பூர்வ்வஸ் ஸுவரோம் 1 = மமோ பாத்த ஸமஸ்த் துரிதக்ஷயவார பரமேஸ்வரப்ரீதியர்த்தம், ஸ்ரௌதமார்த்த விஹித நித்ய கர்மானுஷ்டான யோக்யதா ஸித்யார்த்தம் ப்ரஹ்மதேஜோபிவருத்யர்த்தம் யஜ்ஞோபவீத தாரணம் கரிஷ்யே ,, (அபஉபஸ்ப்ருஸ்ய).

யஜ்ஞோபவீத மித்யஸ்ய மந்த்ரஸ்ய ப்ரஹ்மா ரிஷி: த்ரிஷ்குப்ச்சந்த:

பரமாத்மா தேவதா யஜ்ஞோபவீத தாரனே விநியோக:

பூணூல் = முடிச்சு வலதுகையிலிருக்கும்படி வைத்து வலதுகை மேலும், இடதுகை கீழுமாக இருக்கும்படி செய்துகொண்டு எக்ஞோபவீதம பரமம் ப்ரசாபதேர்யத்ஸ, ஹஜம் பாஸ்த-தாயுஷ்ய-மக்ரியம் பிரதிமுஞ்ச சுப்பிரம் யெக்ஞோபவீத பலமஸ்து தேஜ:-

பின்பு ஆசமனம் செய்து மந்திரத்தை சொல்லி மற்றொன்றை தரித்துக்கொள்ளவும்.

பழைய பூணூலை எடுத்துவிட மந்திரம்.

15. உபவீதம் பின்னதந்தும் ஜீர்ணம் கஸ்மலம் தூஷிதம் விஸ்ருஜாமிஜலே ப்ரஹ்ம வர்சோ தீர்காயுரஸ்து.

யஜ்ஞோபவீதத்தை - மலசலம் விசர்க்கிறகாலத்தில் வலதுகாதில் சேர்த்துக்கொள்ளல்வேண்டும், சேர்க்கைகாலத்தில் மாலையாகத் தரித்துக்கொள்ளல்வேண்டும், அபரகிரியை காலத்திலும் பிதுர்தர்ப்பண காலத்திலும் இடமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்.

16. ஸ்நான ஸ்லோகம்—கங்கேச யமுனே கோதாவரி சரஸ்வதி நர்மதே சிந்துகாவேரி ஜலேஸ்மின் சந்நிதிங்குரு,

---

*ஸ்வஸ்திகாசனம்-என்பது சம்மணங்கூட்டியிருத்தல்.

10. சங்கர்ப்பம்

சிவம்சம்போ ராக்ஞா ப்ரவர்த்தமானஸ்ய ஆத்யப்ரஹ்ண துவிதியபரார்த்தே, ஸ்வதேவ ராக கல்பே வைவஸ்வதமன் வந்தரே, கலியுகே, பிரதம பரதே ஜம்பூத்வீபே பாரதவருசே பரதக்கண்டே.......... சகாப்தே மேரோ தக்ஷண திக்பாகே ஸ்ரீசைலஸ்ய ஆக்னேயப்ரதேஸே கிருஷ்ண காவேர்யோர் மத்யதேசே சமஸ்த்ததேவப்ராம்ஹண சந்நிதௌ அஸ்மின் வர்த்தமான வியவஹாரிக சாந்திர சௌரமானேன பிரபவாதி சஷ்டி.........சம்வத்சாராணும் மத்தியே சம்வத்சரே........ அயனே.........ருதௌ.........மாஸே.........பக்ஷே........ திதௌ.........வாரரே.........சுபநக்ஷத்திரே சுபயோக சுப கர்னே ஏவக்குண விசேஷண விஸிட்டாயாம் சுபதிதௌ ஸ்ரீமான் ஸ்ரீமத்.........கோத்ரஸ்ய........நாமதேயஸ்ய மம் அஸ்மாகம் சககுடும்பானும் க்ஷேமம் தைரிய வீரிய விஜய ஆயுராரோக்ய ஐஸ்வரியாபி விர்த்தியர்த்தம் தர்மார்த்த காமத மோக்ஷ சதுர்வித பலபுருஷார்த்த சித்யர்த்தம் சமஸ்த பாப க்ஷயார்த்தம் ஸ்நாநமஹங்கரிஷ்யே.

11. வேதம் உற்பத்தி

ஸிந்துநதி தீரத்தில் வசித்த ஆரியர்கள் பாசுரங்கள் தங் கள் தேவதைகளைப்பற்றி பாடியது, தெய்வ தோத்திரங்கள் ஆகும். அப்பாசுரங்களின் தொகுதிக்கு (வேதம்) என்று பெயர். வேதபாசுரங்கள் அனேக ஆயிரவருஷங்களுக்கு முன் பாடப்பெற்றவை, அவைகள்—4 வகை. ரிக், யஜுஸ், சாம, அதர்வணம். ரிக் வேதம் பல்லாயிரம் பாசுரங்கள் கொண் டது. அதில் ஆரியர்கள் தங்கள் விரோதிகளுடன் செய்த சண்டைகளையும், தாங்கள் அடைந்த வெற்றிகளையும், அவைகளுக்கு காரணமாயிருந்த தெய்வங்களையும், தம் தொழிலுக்குரிய தேவதைகளையும் துதித்துப்பாடியது. மேற் படி பாசுரங்களில் பண்டை ஆரியர்கள், நடை, யுடை, பாவனை, ஒழுக்கமுறை அவர்கள் அரசாட்சிமுறை தொழில் முறை தெய்வ வணக்கங்கள் நன்கு தெரியவரும்.

வேதங்கள் ரிஷிகளால் பாடப்பெற்றன. பிர்ம்மாவின் நான்கு முகங்களிலிருந்து உண்டாயின என்று சொல்வார்கள் யென்றும், இ—ச—14.

4 வேதத்தை 4 ரிஷிகள் உண்டுபண்ணினதாயும், முன்னுள்ள அறிவாளிகள் 21 பேர்கள் செய்யப்பட்ட நீதிநூல் என்றும்=(11 ஆரியர்களும், 3 பெண்களும், 10 தமிழர்களும் செய்திருக்கிறார்கள் என்றும்) அக்காலத்தில் அது பள்ளிப்பாடமாயும், பின் அதை, வாதராயணன் (வியாசன்) அதில் சில வியாசங்களைச் சேர்த்து 4 வேதமாக்கி அதை, ஈஸ்வர வாக்கென்றும், அருள்வாக்கென்றும் ஜோடித்து எழுதிவைத்தான், பின், ஆக்பர் உபநிஷத்தென்று ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. ஜீ—கோ—110.

ஆரியர்கள், கடற்பிரயாணம் செய்வதற்கு முன், பிரயாணம் இனிது முடியும்பொருட்டு ஜலத்தின் அதிதேவதையை துதிப்பார்கள்.

(ஸோம) என்னும் கொடியின் ரசத்தை பாலொடுகலந்து தெய்வங்களுக்கு நிவேதனம் பண்ணி, பின்பு தாம் அதை பாணம் பண்ணுவார்கள். சில விசேஷகாலங்களில் மாமிசமும் சாப்பிடுவதுண்டு. இ—ச—13.

12. ஆரியர்கள் ஸோமயாகம்

ஆரியர்கள் யுத்தங்களில் ஜயமடையும்பொருட்டு இந்திரனுக்கு பல யாகங்கள் செய்வார்கள். அவைகளில் முக்கியமானது (ஸோமயாகம்) அவைகளில் பசுபந்தம் செய்து அதன் (வபயை) அக்கினியில் நிவேதிப்பார்கள். இ—ச—14.

ஆரியர்கள், புலங்கள் நன்றாய் விளையும்பொருட்டு அதற்கு சாதனமான உஷ்ணம், காற்று, மழை முதலியவற்றிற்குரிய அதிதேவதைகளை பக்தி விசுவாசத்துடன் பிரார்த்திப்பார்கள். ஆகாசத்தை (த்யும்) என்னும் பெயர்கொண்டு ஆராதிப்பார்கள். இ—ச—12.

13. விநாயகர் விபரம்

விநாயகர்=பெண்சாதி ஓர் அரக்கி, வல்லபை. வல்லபை தடவைக்கு 300 பிள்ளைகளைப்பெற்று உடனேசண்டைக்கு அனுப்பிக்கொண்டிருந்தாள். அவளை, விநாயகர் தன் துடையில் தூக்கிவைத்து அவள் வயற்றிலிருந்த கும்ப கலசத்தை துதிக்கையால் எடுத்துவிட்டதாயும், சுப்பிர மணியர் அதனால் அரக்கியை ஜெயிக்க முடிந்ததென்றும், ஜீ–கோ–36–37.

கெஜமுகாசூரன், எந்த மனுஷன், தேவர்கள், மிருகங்கள், கைகளால் இறக்கக்கூடாதென்று வரம் வாங்கியதற்கு, யானைமுகமாக, யானைக்கொம்பை துதிக்கையால் எறிந்து கொன்றதாகவும்,

பாரதம்=மகாமேருகிரியையேடாகவும், விநாயகர் கொம்பை எழுத்தாணியாகவும் எழுதியதாயும்,

விநாயகர், சமுத்திரத்தை தும்பிக்கையால் இழுத்துச் சாப்பிட, பாற்கடலில் பள்ளிகொண்ட தன் மாமன், அதில் அகப்பட்டு விழுங்கப்பட்டு தெரிந்து, தன் சிறுநீர் வழியாக அவரை வெளிப்படுத்தினதாயும், விஷ்ணு, பின் அவரை பூசைசெய்து, அதில் தவறிய தன் சக்கரத்தைப் பெற்றுக்கொண்டதாயும், விநாயகபுராணம் ஜீ-கோ-38.

14. சுப்பிரமணியர்

சரவண பவன்=குமரன், பவன்=சிவன், உருத்திரன் குமரன்=ஆண்மகன், இளையோன், மகன் முருகன், வயிரவன்.

சடாக்ஷர மந்திரம்: ஓம் சரஹணபவ, இதையே-ரஹண பவச, ஹணபவசர, ணபவசரஹ, பவசரஹண, வசரஹணப, என்று மந்திரசாஸ்திரப்படி, வசியம்முதல் மாரணம்வரை செய்வது முறை. அவருடையபெயர் சகஸ்திர நாமங்களில் பார்க்க.

உக்கிரகுமாரபாண்டியன் சுப்பிரமணியர், (மீனாக்ஷி, சோமசுந்தரபாண்டியன் மகன்.) உக்கிரகுமாரபாண்டியன் ராஜ்ஜியம் ஆண்டு, 2 சம்சாரத்தின் இம்சையால் படாத பாடெல்லாம்பட்டு, சன்னியாசியாகி, திருப்பரங்குன்றம், காளி கோவிலண்டை காத்திருந்து யிறந்தவர் (சமாதி) முன்னே காளிகோவில், பின்னே விஷ்ணு கோவில் இப்போது சுப்பிர மணியர் முளைத்திருக்கிறார் என்று, ஜீ—கோ—107.

வள்ளி - பகவன் என்னும் ஓர் பார்ப்பனன் கருவூர் ஆதி யென்னும் ஓர் புலச்சியைச் சேர்ந்து வள்ளி, ஆண் 7 பேர்கள் இவர்கள் வள்ளுவர்கள். 2000-வருஷத்துக்கு முன் பிறந்தவள் பின் குறத்தி எடுத்துவளர்த்தாள். ஜீ-கோ-107.

திருச்செந்தூர், திருக்கழுக்குன்றம், திருப்பரங்குன்றம், கதிர்காமம், குன்னக்குடி, பழனி ஜீ-கோ-109. இன்னும் ஒவ்வொரு சிவன்கோவில்களிலும் இடப்புறம் வீற்றிருக்கிறார்.

சிவன், தவத்துக்குப் போய்விட்டதால், படைத் தலைவர் ஒருவர் வேண்டுமென்று தேவர்கள் வேண்ட, (அக்கினி பகவானை, சிவனது வீரியத்தை கங்கையில் விடச் சொல்ல) அவளுக்கு சுப்பிரமணிய சுவாமி யுண்டானார்.

ஆறு கார்த்திகை பெண்கள் பால் கொடுத்து வளர்க்கச் சொல்லியது. நழுவிய கர்ப்பத்திலுண்டானதால் (ஸ்கந்தா) என்று பேர். கார்த்திகைபெண் வளர்த்ததால் (கார்த்திகேயா என்று பேர்) ஆறு கார்த்திகை பெண்களிடத்திலும் ஆறு முகமாகயிருந்து பால் சாப்பிட (ஆறுமுகன்) மீதியை குன்றில் விட, பொன், வெள்ளி முதலிய லோகங்கள் ஆனது. மேற்படி பிள்ளை வளர்ந்து தேவர்கள், சேனைத்தலைவர் ஆக்கிக் கொண்டார்கள். வால்மீகி ராமாயணம், பால காண்டம் 37-வது சருக்கத்தைக் கவனிக்க. இ—ஆ—35.

ஸ்கந்த புராணத்தில், சிவன் 6 முகங்களில், 6 பொறிகள் உண்டாகி (அக்கினி வாய்வு தேவனால்) கங்கையில்விட,

சரவணப்பொய்கையில் கொண்டுபோய் விடப்பட்டு 6, குழந்தைகள் ஆகி, 6 கார்த்திகை பெண் பால் கொடுத்து வளர்த்த தாய், இ-ஆ-37.

கங்கை என்றதில் விபரித்தபடி சிவபெருமான் உமையைக் கல்யாணம் செய்தார். 100 தேவராண்டு கூடியும் பிள்ளை உண்டாகவில்லை. தேவர்கள், உமக்கு பிள்ளை பிறந்தால் தாங்கமுடியாதென்றும், தவம் செய்யப்போகச் சொன்னார்கள். உடன்பட்டு அவரும், அவ்விதம் நடந்தது. அதற்கு முன் பிரிந்த வீரியம் பூமியில்விட, வெள்ளிமலையாகவும், நாணற்காடாகவும் ஆனது. அக்கினிதேவனுக்கும் கார்த்திகை பெண்ணுக்கும் நாணற்காட்டில் மகனாய் ஆறுமுகக் கடவுள் தோன்றினார். வால்மீகி ராமாயணம், பாலகாண்டம் 36-வது சருக்கம். இ-ஆ-34.

தாருகாவணத்து ரிஷிமார்களின் பத்தினிமார் 8000 பெண்களை சிவன் கற்பளிக்க மாயனைக்கொண்டு, தன்னை பெண்ணாக்கச்செய்து, ஆறுபேர்களும் கெர்ப்பமுண்டாகி 6 பிள்ளைகளைப் பெற்றது. ரிஷி கேள்விப்பட்டு மர்மஸ்தானம் அற்றுவிழும்படி சபித்தது. 6 பிள்ளைகளையும் ஒன்றாய் அணைத்ததால் ஆறுமுகன் ஆனது.

15. கங்கை விபரம்

கங்கைக்கரையில் கௌசிகமுனி ராமருக்குச்சொன்னது வால்மீகி ராமாயணம், பால காண்டம் - 36-வது சருக்கம் காதிராஜன் மக்கள் கௌசிகமுனி-1 கௌசிகா, 2 ரிஷி விபரத்தில் முற்றிலும் பார்க்க.

கௌசிகா = கங்கை நதியானள் = இக்கரையில் தான், வாழ்வதாயும் யாகம்செய்ய சித்தாச்சிரம்ம வந்ததாயும், (கௌசிகமுனி விஸ்வாமித்திரர்) சொன்னார். இ-ஆ-24.

36-வது சருக்கம் கம்பர் ராமாயணத்தில், சோனைநதிக் கரையில் சோலையிலிருந்து சொன்னதாயிருக்கிறது. இ-ஆ-39.

கங்கையை பகீரதன், 1000 ஆண்டு நான்முகனையும், 1 ஆண்டு சிவனையும், தவம்செய்து (தருவித்தது) கொண்டு வந்தது, வால்மீகராமாயணம் 38-முதல் 44-வரை சருக்கங்களிருக்கிறதாம். இ—ஆ—40.

ஷியான் நான்முகனை நோக்கி 10000 ஆண்டும், சிவபெருமானை நோக்கி 10000-ஷூ, கங்கையை நோக்கி 5000-ஷூ, திரும்ப சிவபெருமானை நோக்கி 2000-ஷூ, மறுபடி கங்கையை கோக்கி 2000-ஷூ தவம் செய்ததாய், கம்பர் சொல்லுகிறார் என்றும், இ—ஆ—41.

இமயமலை அரசனுக்கு, கங்கை 1. உமை 2. பெண்கள் தேவர்கள், மலையரசனைக்கேட்டபடி 3 லோகத்துக்கும் மூத்த மகள், கங்கையாக ஓடவும், 2-வது மகள் உமையை, சிவபெருமான் கல்யாணம் செய்தார் என்றும், இ—ஆ—33.

ஹிமாலயத்தின் உயர்ந்த பிரதேசத்தில் உற்பத்தியாகும் சிந்து, கங்கை, பிரமபுத்திரா என்று 3 பெரிய ஜீவ நதிகள், விந்திய பர்வதத்துக்கும், ஸாத்பூரா மலைக்கும் மத்தியில் நருமதை உற்பத்தியாகி மேற்கு நோக்கி ஓடும்நதிகளுக்கு (நதம்) என்று பெயர். அராபிக்கடலில் சேருகிறது. ஸாத்பூரா மலைக்கு தெற்கில் ஓடுவது (தபதிந்தம்) அராபிக்கடலில் சேருகிறது. இ—ச—5.

16. திரிமூர்த்திகள் லீலை.

பிர்ம்மா—விஷ்ணு—சிவன்.

1. அத்திரிமாமுனி சம்மாரம் அனசூசா ரிஷிவிபரத்தில் பார்க்க.

2. பிருகுரிஷி சம்சாரம் நாகவல்லி ரிஷிவிபரத்தில் பார்க்க.

திரிமூர்த்திகளும் மேற்கண்ட ஒவ்வொரு ஸ்திரீயின் கற்பை அழிக்க சென்றதாயும், (ரிஷிபத்தினி 3 பேர்களையும்) அவர்கள் 3 குழந்தைகளாக்கினதாயும், மேற்கண்ட திரிமூர்த்திகளின் தேவிமார்கள் மேற்படி ரிஷிபத்தினிமார்களிடம்

பணிந்து மாங்கிலிய பிச்சைகேட்டு திரும்பிக்கொண்டு வந்த தாயும், ஜீ—கோ—38.

17. சிவன் லீலே.

சிவன்—தேவலோகத்தில் தேவசபையில் நிர்வாணமாக காமவெறியாகித் திரிகையில் தண்டிக்கப்பட்டும், ஒருநாள் தேவாரண்யத்துக்குப்போய் அமிர்தரஸ பழங்களினல் அலங்காரமாகி இந்திரியம் ஒழுகி ஆறாகப்பெருகிற்று. அந்த நதியில் ஸ்ரீயர் முதலாக முப்பத்துமுக்கோடி தேவர்கள் உற்பத்தியானார்கள். அவர்களை தேவிமார்களுக்கும் கொடுத்து தானு மனுபவித்துக்கொண்டிருந்தார். பு-ஆ-33.

பிருகுமுனி வருவதறியாமல் சிவன் பத்தினியுடன் லீலேயிலிருப்பதைக்கண்டு சினங்கொண்டு நின்றவரை கரு நெற்றிக்கண் திறந்து ரிஷியைப்பணிந்து தவத்தினுடைய மகிமையை அறிந்த சிவன் ரிஷியை தழுவநெருங்க, ரிஷி தூஷித்தது.

இந்திரன் வேண்டுகோளுக்கு விஷ்ணு, சிவனை குழந்தையாக்கி பிர்ம்மன் சுக்கிரனிடம் கொடுக்க, சுக்கிரன் அசுரர்களிடத்தில் தர, அவர்கள் வளர்த்து பெருந்தேவரையும் சிதைத்து, மயன், மால் இந்திரனை சின்னம்செய்து சிவனோடும் எதிர்த்தான்.

சம்ஹாரகர்த்தர் = சிவன், மகாதேவர். சிவன் = மங்களம், சுகிதம், ஆனந்தம் என அருத்தம். ஹி-தூ-ப-27.

சம்ஹாரகர்த்தா = நம்முடையகாதில் கொடுமையாகப்படுகிறது. துக்கத்தி னின்று விடுவிக்கிறவர் என்ற அர்த்தம்.

சிவனல், வந்த ஜலந்திரன் (அரக்கன்) ஜலந்திரனைக் கொல்லமுடியாமல் ஒளிந்து கொண்டான். தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும் உண்டாகும் இம்சையை நாரதரின், தந்திரத்தால் மஹாவிஷ்ணு, தன் மாயையின் சக்தியால் அவ்வசுரனை பரமசிவனல் சிக்ஷை செய்வித்து ரக்ஷித்து காட்சி செய்தார்.

சிவன் அட்டமத்துச்சனியால் காமத்தில் புரண்டு பிச்சை எடுத்துண்டான். கல்லால் விருக்ஷத்தின்கீழ் தபசு செய்தார்.

தக்கன் வேறு சிவனை உற்பத்திசெய்ய யாகம் செய்தது. முண்டகன், முப்புரத்தை எரிக்க தேர் செய்தது. கொண்டல்வண்ணன், சாரதியாக வைக்க தேர் நகலாமல் செய்தார்.

உமை - முழுக்குக்காக தன் அழுக்கில் பிள்ளை உண்டாக்கி முன்வாசலில் காவல் வைக்க, முக்கண்ணன் வர, இருவருக்கும் சண்டையுண்டாகி (சிவனைப் புடைத்தான்) புழுக்கையால் அடிபட்டான்.

சிவன் (பத்மாசூரனுக்கு அத்துமீறி, வரம் கொடுக்க) பத்மாசூரனால் விரட்டப்பட்டு வேலியிற்போய் ஒளிந்தான். (அரிக பூரணன் உற்பத்தி) கல்லினால் அடிபட்டார்=காலினால் மிதிபட்டார், பாண்டுமைந்தன் வில்லினால் அடிபட்டார். பிட்டுக்கு மண் சுமந்து, பிரம்பு அடிபட்டார், சுந்தரமூர்த்தி சம்சாரம், பரவைநாச்சிக்கு சிவன் தூதுசென்று மணம் முடித்தது.

சிவன் - அறுத்து சமயல்செய்த சீராளனை உயிருடன் எழுப்பிவிட்டதாயும், ஆகாயத்திலிருந்த திரிபுரத்தை சிரித்து எரித்துவிட்டதாயும், மன்மதனை, நெற்றிக்கண்ணால் எரித்துவிட்டு பின், அரூபியாயிருக்கும்படி உயிர்ப்பித்தார் என்றும், பெற்றதாயை பெண்டாட்டியாக்கிக்கொண்ட மகா பாதகனுக்கு முத்தி கொடுத்ததாயும், (திரு-பு-26.) கங்கைஎன்னும் பெண்ணை தன் சிரசில் வைத்திருப்பதாயும், தன் இடது பாகத்தை பார்வதிக்கும், வலது பாகத்தை விஷ்ணுவுக்கும் கொடுத்துவிட்டதாயும், ஜீ—கோ—38.

சிவன், பிர்ம்மன் சிரசில் ஒன்றைக்கிள்ளி பிர்ம்ம, கபாலம், கையில் ஒட்டி பித்தேறி விஷ்ணு சூட்சியினால் பாரத யுத்தம் நடந்து பிர்ம்மகபாடம் நிறைந்து கைவிட்டு விட்டதாகவும், பித்தம் தீர்ந்ததாகவும், ஜீ-கோ-43.

பார்வதி விஜயனை நினைத்தாள் என்றும், சொல்லப்பட்டிருக்கிறது.

சங்கரன் - சத்தி, ஐங்கரன், அறுமுகன், பங்கயன், பரந்தாமன் இவர்களில் யார், முதல் உற்பத்தி யென்றும், மார்க்கண்டேயர் புராணத்தில், காளியின் மகன் சிவன் என்றும், பிர்ம்ம புராணத்தில் 3 பேர்களைப் பெற்றாள் என்றும், லிங்கபுராணத்தில், பிர்ம்மன் மூச்சில் நீலகண்டன் வந்ததாயும், பாகவதத்தில், விஷ்ணு, பங்கஜனைப்படைக்க அவனால் சிவன் உற்பத்தி என்றும், சொல்லுகிறது (உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம் தெள்ளியர் அர்ச்சிக்குமாறு சீரமே கோவில் அதில் மனமே பீடம் அறிவே தெய்வம்.)

ஜீ-கோ-113.

ஆவுடைலிங்கம்-ஆவுடைபெண்குறி - ஆடிடும் லிங்கம் பீஜமே, ரிஷி பத்தினிகளைக் கூடிய தோஷத்தால், சிவனையும் பார்வதியையும், ஜனனேந்திரியங்களாகும்படி ரிஷிகள் சபித்து விட்டார்கள் என்றும், சிலதில் மிகுந்த தபசுசெய்தும் சிவனும், பார்வதியும் காமக்களியாட்டத்திலிருந்தபடியால், மேற்படி ரிஷிகளுக்கு கோபமுண்டாகி அப்படி சபித்து விட்டதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜீ-கோ-41.

சுயம்புலிங்கம் - கம்மியனாலடித்து வைக்கப்பட்டது, தானாய் முளைத்தது என்கிறார்கள். சுயம்பாய்ப் பாறைகளும் மலைகளும், உற்பத்தியாயிருக்கிறது. ஜீ—கோ—106.

அப்புலிங்கம்—ஒருவித சலவைக்கல்லினால் செய்யப்பட்டது. லிங்கத்தில் வியர்வை கொப்பளிக்கிறதாம், அது தண்ணீர் முளைத்த, ஜலலிங்கமாம். மூலத்தானத்துக்கு பக்கத்தில் ஒருதெப்பமிருக்கிறது. அதிலிருந்து தண்ணீரூரும்படி செய்திருக்கிறார்கள். தேவஸ்தானம் மராமத்து செய்யவும் வெளியாகிவிட்டது. திருவானைக்காவல் அப்புலிங்கம்.

ஜீ-கோ-106.

அக்கினிலிங்கம் - பூசிய சந்தனம் காய்ந்துவிடுமாம். அது ஒரு காந்தக்கல்லினல் செய்யப்பட்டது. திரு உண்ணு மலை. ஜீ–கோ–106.

வாய்வுலிங்கம் - அதனடுத்து எரிகின்ற விளக்கு ஆடு கின்றது. லிங்கத்தினிருபக்கத்திலும் பொடித்துவாரங்கள் உண்டு. வெளியிலிருந்து அதன்வழியாய் காற்று பிரவேசிக் கிறது. அந்த துவாரத்தை அடைத்துவிட்டால் விளக்கா டாது. ஜீ–கோ–106.

ஆகாசலிங்கம் - இதில் கால், அரை, முக்கால், முழுப் பாவாடை யென்று, திரையைக் கொஞ்சம் கொஞ்சமாய்த் திறந்து காண்பிக்கிறது. முன் அது சிதம்பர ரகசியம் என்றுபேர். காவித்திரையைத் தவிர நட்டுவைத்திருக்கும் கல்லைக்கூடக்காணேம். சிதம்பரம் இப்போது ரத்தின சபா பதி சிவகாமி வைத்திருக்கிறுர்கள். ஜீ–கோ–106.

காஞ்சி காளாஸ்திரி - சமாதியான இடங்கள் என்கிறுர் கள்.

மதுரை சோக்கலிங்கம் - சோமசுந்தரபாண்டியன், சுந்த ரானந்தர் சமாதி, மேற்படியார் பாரி மீனுக்ஷி சமாதி. ஜீ–கோ–107.

பழைய சொக்கநாதசாமி, புது சொக்கநாதசாமி என 2 கோவில் உண்டு.

இந்திரன் உத்திரவுப்படி சமுத்திரம் பொங்கியதற்கு உக்கிரபாண்டியன் வேலினல் சுவரிடச்செய்தது. ஜீ-கோ-35.

மீனுக்ஷி கல்யாணம் - மதுரையில் நடந்தது. மலை மலை யாய் மிஞ்சியிருந்த ஆகாராதிகளைத் தின்ற ஒரு பூதத்துக்குப் போராமல் வற்ருத அன்னக்குழியையும், வைகை யாற்றை யும், ஒரு காலத்தில் கங்கா நதியையும் சிவன் தருவித்ததா யும், மாமியார் கடல் ஸ்நானம் செய்யும்பொருட்டு இறந்து போன தன் மாமனையும் 7 கடலையும் மதுரையில் வர

வழைத்ததாயும், பாண்டியன் சத்தமேகங்களேயும் விலங்கிட்டு சிறையில் அடைக்க, வெள்ளான் ஜாமீன்கொடுத்து மீட்டியதாயும், ஜீ–கோ–35.

மீனுக்ஷி - 57-வது திருவிளேயாடல் வலேவீசியதில் ஒரு மீனுக்ஷி உண்டாகி கல்யாணம் நடந்தது. மலேயத் துவஜ பாண்டியன் பிள்ளேயில்லாமல் அக்கினியில் ஜனித்தவள். இவளுடைய மகன்தான் உக்கிரகுமார பாண்டியன்.

சிவன் - மந்திரம் ஓம்-நமசிவய=இதையே மசிவயந, சிவயநம, வயநமசி, யநமசிவ என்று மந்திர சாஸ்திரப்படி மாற்றி அட்டமாசித்தியாடுகிறது என்றும்;

யாகம் - புத்திர காமேஷ்டி, மதன காமேஷ்டி, அஸ்வமேதி, அஜமேதி, நரமேதி, குக்குடயாகம் முதலியதுகளிருப்பதாயும், மது, மாமிசம், பக்ஷணம், விபசார முதலியதுகளடங்கியதாயும், ஜீ–கோ–48.

ஆதிவேளாளர் துவாரபாலகர் மேற்படி கோத்திரந்தைச் சேர்ந்தவர்கள். ஆறு வீட்டுக்காரர்கள் தற்காலத்தில் சைவர்கள், அசைவர்களாயுமிருக்கிருர்கள் என்று, ஜீ–கோ–84.

18. ஹோலிப்பண்டிகை (மன்மதன் பண்டிகை)

மாசிமாதம் பௌர்ணமி திதியில், (மன்மதன் பேயர்) – மால் மகன் 1. மலர்வேதன் மகன் 2. பால்வண்ணன்மகன் 3 தர்மன் மகன் 4. கண்ணன் மகன் 5. சங்கல்ப்பன் மகன் 6. வேள்மதன் மகன் 7. (அங்கஜன், மாரன், மதன்)

மாரனும், ரதியும் சிவதோளில் வந்ததென்றும், பிர்ம்மனுடைய சூலில் பிறந்ததென்றும், தக்ஷன் மகள் சிரத்தைகன்று மன்மதன் ஜனித்தான் என்றும், வாசுதேவருக்கு மகன் என்றும், மோகப்பிள்ளே என்றும் சொல்லுகிருர்கள்.

மதன் 4-வகை யோனி 7-வகை தோற்றத்தில் பிறந்தார் என்றும், மன்மதன் பிறந்தஇடம் ரதி பிறந்தஇடம் எது என்றும், யுகம், வருஷம், மாசம், தேதி, நாள், திதி, நக்ஷத்திரம், வயது எது என்றும், சிலபேர்கள் யோசிக்கிறார்கள்.

மன்மதன் ஆண்டது ஆரோக்கியபுரம் என்றும், மகர மீன் கொடி 5-மலர்கள், கணை, கரும்புவில், கடல், முரசு, சந்திரன், குடை என்றும் சொல்லுகிறார்கள். எரிந்ததாகச் சொல்லுகிறஇடம் கபிலை, மங்கநாடு, அருணாசலம், கொறுக்கை, கோளகிரி. காளத்தியில் காளகண்டன் என்ற பேருடன் எரிந்ததாயும் சொல்லுகிறார்கள்.

எரியாக்கக்ஷி - ஹாஜா முகைதீன் அவர்கள் விருப்பத்தின்படி வி. எஸ். பாப்புதாஸ் இயற்றியது. சென்னை சூலை, பெரிய நாயகியம்மன் அச்சுக்கூடத்தில் பதிப்பித்தது. 1933-ஷ ரிஜிஸ்தர்.

மாண்டவ்யன் - பெண்சாதி டிண்டிகை = இவர்கள் மகளை, தனித்துவிட்டு விட்டுபோக முடியாமல் எமனிடத்தில் வைத்திருக்கும்படி சொன்னதில், எமன் அவளுடன் சேர்க்கையாகி, பகலில் தன் வயிற்றில் வைத்து இரவில் பெண்ணுக்கிச் சேர்தல் திரும்ப மேற்படி பெண், அக்கினி தேவனை, தான் விழுங்கி அவனுடன் சேர்ந்துகொண்டிருந்தாள். பு–ஆ–41.

அக்கினிதேவனை, எமன் தண்டாயுதத்தால் அடிக்க சகல சராசரங்களிலும் ஓடியது. பு–ஆ–44.

19. ஜோதிடம் உற்பத்தி

சாலிவாகனன்-காலத்தில், குசத்திக்கும், பார்ப்பானுக்கும் பிறந்தவன் சாலிவாகனன்.

சாலிவாகனன் அரசுக்கு வந்தபின், தன் ஞாபகார்த்தமாக சகாப்தம் உண்டுபண்ணி, வானசாஸ்திரத்தை விஸ்தரிக்கச் செய்தான். 2000 வருஷமாகும். பின்பு அதை ஜோதி

டம் என்று பேர்வைத்தார்கள். சாலிவாகனனுக்கு முன் 2000 வருஷத்துக்கு முன் ஜோதிடம் கிடையாது. ஜீ-கோ-10.

சுந்தரமூர்த்தி, சேரமான், ஔவை, உயிருடன் கைலாசம் சென்றிருப்பதாயும், ஜீ–கோ–45.

கம்பர், சோழர், கேழ்வரகர், ஒட்டக்கூத்தர், ஔவையார், மலைக்கொழுந்தர், மொச்சைப்பருப்பர், உலக்கை கழுத்தர், அடியார்கள், பாடல்காரர்கள், வித்துவான்களின் கவியினல் நெல்மாரி, மண்மாரி பெய்ததாகவும், வெட்டுப்பட்ட பலாச்செடியும், பனைமரத்துண்டும் பாடினவுடனே மரம் ஆகி, பூத்து, காய்த்து பழம்பழுத்ததாகவும், குடத்திலிருந்தவள் = செட்டிபெண் (அங்கம்) உயிர் பெற்றெழுந்தாள் என்றும், ஜீ–கோ–45.

மிருகண்டேயர், பெண்சாதி அந்திரி. மகன்-மார்க்கண்டன். மிருகண்டேயர், மகனல் மோக்ஷமடைந்ததாயும் கூறப்பட்டிருக்கிறது.

விவேகாநந்தா பிரஸ், தளவாய்த்தெரு, மதுரை-40.

மதுரை, சித்தர். A. V. R. S.
தத்துவ ஆராய்ச்சி நிபுணரால்
தொகுக்கப்பெற்ற புஸ்தகங்கள்.

No. 1 ஸ்மிருதி விளக்கம்.
,, 2 சிவமத விளக்கம்.
,, 3 புத்தர்மத விளக்கம்.
,, 4 தசாவதார விளக்கம்.
,, 5 இஸ்லாம்=மகம்மதிய மத விளக்கம்.
,, 6 ஈஸா நபி=ஏசுநாதர் கிறிஸ்துவ மத விளக்கம்.

மதுரை, வடக்குமாசிவீதி, டோர் No. 179-ல்
ஸ்தாபித்திருக்கும்,
Messrs. R. V. பாங்கின் உதவியால்
அச்சியற்றப்பெற்றது.

Note:– மேற்படி R. V. பாங்கில் ஜனங்களுடைய நன்மைக்காக சகாய வட்டிக்குப் பணம் கிடைக்கும்.
தவிர பலவிடங்களுக்கும், பாங்கு மூலமாக உண்டியல்கள், செக்குகள் மாற்றவும் கொடுக்கப்படுகிறது.

R. V. பாங்க் மதுரை. } கா. ரெங்கையஞ்செட்டியார் Av.l. பிரஸிடெண்டு.